DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | | | : | **S.C : 109/2024** | |
| Prosecution Witness | | | : | **PW - 2** | |
| Name | : | திரு.ஸ்ரீதர் | Occupation | : | எலக்ட்ரிசீயன் |
| Father's Name/ Husband | : | கலியமூர்த்தி | | | |
| Village | : | சுந்தரபெருமாள் கோவில் | Age | : | 26 |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 11th day of March 2026.

11-03-2026

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் :3.43**

(1 முதல் 6 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**முதல் விசாரணை**

நான் தற்போது துபாயில் எலக்ட்ரீசியனாக வேலை பார்க்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும் பக்கத்து தெருகாரர்கள். புது வருடம் பிறப்பதற்கு முதல் நாள் 31.12.2022 அன்று இரவு 12.00 மணி அளவில் என் வீட்டின் முன்பாக என் நண்பர்களுடன் புது வருடத்தை கொண்டாட நின்று கொண்டு இருந்த போது கரண்ட் கட் ஆகி விட்டது அப்போது ஏற்பட்ட தள்ளுமுள்ளுவில் எனக்கு வயிற்றில் காயம் ஏற்பட்டது எதனால் யாரால் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. நான் மயக்கம் ஆகிவிட்டேன். என்னை என் அண்ணன் அ.சா.1 கொண்டு போய் மருத்துவமனையில் சேர்த்தார். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd/- J.Radhika,
Additional District Judge
Fast Track Court,
Kumbakonam.

அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

நான் போலீசார் விசாரணையில் 31.12.2022 ம் தேதி இரவு 12.00 மணியளவில் நானும் என் தம்பி சந்தோஷ் மற்றும் என் நண்பர்கள் உடன் வீட்டு வாசலில் புத்தாண்டை கொண்டாட நின்று கொண்டு இருந்த போது எங்கள் ஊரை சேர்ந்த வீரமணி மகன் சஞ்சய் அவரது அண்ணன் சந்தோஷ் மற்றும் அவரது நண்பர்கள் புகழேந்தி, திருமலை ஸ்ரீனிவாசன், உத்தாணி பாலு மகன் சஞ்சய், சிலம்பரசன் ஆகியோர் என்னை பார்த்து யாருடா என் நண்பன் சந்தோசை அடித்தது என்று தகாத வார்த்தைகளால் திட்டிக்கொண்டு இருக்கும் போதே என்னை மற்ற எதிரிகள் பிடித்துக்கொள்ள வீரமணி மகன் சஞ்சய் தான் மறைத்து வைத்திருந்த கத்தியால் இத்தோடு செத்து தொலைந்து போடா என்று ஓங்கி என் வலது பக்க அடி வயிற்றில் குத்தினார் என்றும், நான் கீழே விழுந்து சத்தம் போடவே என் அண்ணன் அ.சா.1 ஓடிவந்து பார்த்தார் என்றும், நான் வயிற்றில் ரத்த காயத்துடன் மயக்கமாகிவிட்டேன் என்னை, என் அண்ணனும், எங்கள் தெருவை சேர்ந்த பாலு மகன் கார்த்திக், ராமகிருஷ்ணன் மகன் கண்ணன் ஆகியோர் மருத்துவமனை கொண்டு சென்றதாக சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**முடிக்கப்பட்ட நேரம்:3.50**

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd/- J.Radhika,
Additional District Judge
Fast Track Court,
Kumbakonam.